செ.வெ.எண். 72/பிப்ரவரி　　　　　　　　　　　　　　　　　　　　　　தேதி : 27.02.2017

# தருமபுரி மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மின் தூக்கியை (லிப்ட்) மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தார்.





தருமபுரி மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மின் தூக்கியை (லிப்ட்) மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

பின்னர் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி அரசு மகப்பேறு மருத்துவமனையில் மகப்பேறு தாய்மார்கள் பயடையும் வகையில் மின் தூக்கி (லிப்ட்) வசதி நீண்டநாள் கோரிக்கையாக விடுத்து வந்தார்கள். அதை மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலித்து 4 மாடிகள் இருந்தால் தான் மருத்துவ வளாகத்தில் மின் தூக்கி வசதியை ஏற்படுத்த முடியும். ஆனால் விதிகளை தகர்த்தி மகப்பேறு தாய்மார்கள் சிரமத்தை போக்கிடும் வகையில் உடனடியாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இவ்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கர்ப்பிணி பெண்கள் மற்றும் தாய்மார்களுக்கான சிரமம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் மருத்துவமனை வளாகத்தில் மின் தூக்கியை நல்ல பராமரிப்பு முறையிலும், சுகாதார முறையிலும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென இவ்விழாவில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில் தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. சுவாமிநாதன், மருத்துவ கண்காணிப்பாளர் மரு. இளங்கோ, செய்தி மக்கள் தொடர்பு

அலுவலர் திரு. இரா. சண்முகசுந்தரம் உட்பட துறை ரீதியான அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.